
# திருநாரணன் திருவந்தாதி




## குமுதவல்லி நாயிகா சமேத நிக்ஷேபவித்த பரப்ரஹ்மணே நம :

அறியாதவரையும் அறியவைக்கும் அரி யாதவன்தன்னை
பெரியவாய கண்ணானை பெரியோனை நிக்ஷேபவித்தனை
சித்திரை சித்திரையோன் அவதரித்த கோளூர்மாநிதியை
எத்திறமும் மறவாதே நீ நன்னெஞ்சே !

## நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

## ஆதிநாத நாயகி - குருகூர் நாயகி சமேத ஆதிநாத பரப்ரஹ்மணே நம :

நன்னெஞ்சே நீயடைவாய் நம்முனிவன் குருகூரனிடம்
எந்நாளும் நமக்கருள கேவசனோ டுறையுமிடம்
பொன்னார்மேனியிலே வகுளம் தான் துலங்குமிடம்
இந்நாளே சென்றடைவாய் பிறப்பில்லை இனியுனக்கே !!

**<u>வைகுந்தநாயிகா சமேத வைகுண்டநாத பரப்ரஹ்மணே நம:</u>**

பிறப்பில்லை இனிஎமக்கே உலகீர்காள் கேண்மின்
இறப்புமில்லை இனிஎமக்கே நம்மாழ்வான் அடியடைந்தோம்
அண்டக்குலத்துக் கதிபதியை அமரரேத்தும் நவநிதியை
தொண்டகுலத்துள்ளுள்ளீர் வந்து வைகுண்டத்தில் காண்மினே !!!

**<u>திருப்பேரை - நெடுங்குழை நாச்சியார் சமேத மகர நெடுங்குழைக்காதன் திருவடிகளே சரணம்</u>**

கண்ட கண்கள் வேறொன்றை காணாது
கொண்ட உள்ளம் வேறொன்றை கொள்ளாது
கண்டே உணர்ந்தேன் திருப்பேரை நகரினிலே
கொண்டேன் அடிமை குழைக்காதனுக்கே !!

**<u>மலர்மகள் நிலமகள் உடனுறை காய்சின(காசினி) வேந்தன்</u>**

**<u>திருவடிகளே சரணம்</u>**

தன்னால் இயலாத செயலொன் றில்லாதவனை
எந்நாளுமென் உளம் விட்டகலாதவன் தன்னை
விண்ணாளாவிட் டிம்மண்ணாளும் காசினி வேந்தனை
கண்ணாரக் கண்டேன் புளிங்குடி யடைந்தே !!

**<u>கருந்தடங்கண்ணி நாச்சியார் சமேத அரவிந்த லோசன பரப்ரஹ்மணே நம :</u>**
**<u>அலர்மேல்மங்கா - பத்மாவதி நாயிகா சமேத ஸ்ரீனிவாச பரப்ரஹ்மணே நம :</u>**

அடைந்தேன் அறிந்தேன் அரவிந்த லோசனனை
தடந்தோள் மார்வன் தெய்வப் பிரானை
கிடந்தேன் படியாய் குலசேகரன் போல்
தொலைத்தேன் துயரை தொலைவில்லி மங்கலத்தில் !

**<u>வரகுணமங்கை - வரகுணவல்லி நாயிகா சமேத விஜயாசன பரப்ரஹ்மணே நம</u>**

மங்கலமாய் மாமருந்தாய் மறையுரைக்கும் விழுப்பொருளாய்
திங்களவன் இருப்பிடமாய் தீமையெலாம் தொலைப்பதுவாய்
எங்களிறை விஜயாசனன் இருமகளோடு அமர்ந்தருளும்
மங்கையடைந்தார்க் கில்லை இடர் !!

**கமலாவதி - அலர்மேல் மங்கை நாயிகா சமேத வேங்கடவாண பரப்ரஹ்மணே நம :**

இடரேதும் எமக்கில்லை இருடீகேசன் தாள்பணிந்தோம்
சுடராழிவல்லான் வேங்கட வாணன் இடமடைந்தோம்
மாயக்கூத்தனை மாமலராள் கேள்வனை கேசவனை
ஆயனை பெருங்குளத்தில் கண்டே வணங்கி !!

**வரமங்கை நாச்சியார் சமேத ஸ்ரீ தோதாத்ரி நாத பரப்ரஹ்மணே நம** :

வணங்கிடுவாய் நன்னெஞ்சே வானமாமலை நாயகனை
பிணிதீர்க்கும் மாமருந்தை தோதாத்ரி நாதனை
பல்வகையால் பவித்திரனின் பாதமலர் அடிதொழுது
நல்வகையால் நமோ நாராயணாய வென்றே !!

**குறுங்குடிவல்லி நாயிகா சமேத வைஷ்ணவ நம்பி திருவடிகளே சரணம்**

நாரண நாமம் சொன்னோம் நன்மையெல்லாம் நாமடைந்தோம்
காரணன் அவன்தான் என்றே கருத்தினில் இருத்திவைந்த்தோம்
பூரணன் புண்ணியன் எதிராசனுகந்த நாரணநம்பியைக் கண்டோம்
தோரணமாடும் குறுங்குடியுள் நின்றிருந்து நடந்து கிடந்தானை !!!

**மரகதவல்லி நாயிகா சமேத ஆதிகேசவ பரப்ரஹ்மணே நம :**

கிடந்தானை திருவட்டாற்றிணுள் வந்து திகழ்ந்தானை
படைப்போனை படைக்குமுன் வந்திங்கு உறைந்தோனை
அடைந்தோனை அவனுயர மூவழிகாட்டி அருள்வோனை
அடைந்தே உகந்தேன் உயர்ந்தேனே !!!

**ஸ்ரீஹரிலக்ஷ்மி நாயிகா சமேத அனந்த பத்மநாப பரப்ரஹ்மணே நம :**

உயர்வற உயர்நலம் உடையவனாய் உயர்ந்தான்தன்னை
மயர்வரு மதிநலமருளும் மாதவனை மறைப்பொருளை
அயர்வரு மமரரேத்தும் அழகனை அனந்தன்தன்னை
துயரற தொழுதேன் அனந்தபுரியுட் புகுந்து !!

**புண்டரீகவல்லி நாயிகா சமேத பத்ரிநாராயண பரப்ரஹ்மணே நம :**

புகுந்தான் என்னுள் என்னையும் தன்னிலிட்டான்
மலர்ந்தான் என்னுள் என்னையும் மலர்த்தி வைத்தான்
அமர்ந்தான் என்னுள் நந்தா விளக்கொளியாய்
நிறைந்தான் முழுதும் மணிமாடத் துள்ளானே !!

**அம்ருதகடவல்லி நாயிகா சமேத அழகியசிங்கப் பரப்ரஹ்மணே நம :**

உளனென்ற மதலை சொல்காக்க உளதிலெல்லாம் உறைந்திருந்தான்
இலனென்ற அவன்தந்தை ஆகம்கீறி இலனென்றே ஆக்கிவைத்தான்
நலந்தரும் நாரணநாமம் நம்நாடனுக்கே நயந்துரைத்தான்
வலந்தனில் மங்கைகொண்டான் திருவாலி நாயகனே !!!

**அம்ருதவல்லி நாயிகா சமேத வேதராஜ பரப்ரஹ்மணே நம :**

நாயகனாய் நின்று நாள்தோறும் நமக்கருள்வான்
பாயுரமாய் பாடுதற்கு மங்கையர்கோன் அகந்திறந்தான்
நாயகியோடு மணக்கோலம் காணவைத்தான் நகரியுள்ளே
நாயடியேன் கண்டுகொண்டேன் நாநிலத்தில் பிறவேனினி !!!

**அம்ருதவல்லி நாயிகா சமேத குடமாடு கூத்தன் திருவடிகளே சரணம்**

பிறப்பதெல்லாம் இறப்பதற்கில்லை என்றுரைத்தான் அவனேபின்
இறப்பதெல்லாம் பிறப்பதற்கும்மில்லை என்றறிய வைத்தான்
பிறப்பிறப் பில்லாதவனை, மாயனை, குடமாடு கூத்தனை
சிறப்பிலாவடியேன் அரிமேய விண்ணகரில் கண்டேனே !!

**வைகுந்தவல்லி நாயிகா சமேத வைகுண்ட நாத பரப்ரஹ்மணே நம;**

கண்டு கொண்டேன் வைகுண்ட நாதனை
விண்ணவர் போற்றும் பரமபத நாதனை
எண்ணிலா கருமமும் பிறப்பும் தொலைத்தேன்
வண்டுலாம் பொழில்சூழ் வைகுண்ட விண்ணகரில் !!

**அலர்மேல்மங்கை நாயிகா சமேத அண்ணன் பெருமாள் திருவடிகளே சரணம் :**

விண்ணுளோர் வியக்கும் விரையார்பொழில் வேதியனை
அண்ணனோடு அலர்மங்கை அருள்புரியும் ஆரமுதை
மங்கையர்கோன் மனம்நெகிழ மாற்றிய நல்குமுதத்தை
எங்கள்குலத்தின்னமுதை வெள்ளக்குளத்தில் கண்டேனே !!!

**செங்கமல நாச்சியார் மடவரல் மங்கை சமேத ராஜகோபால பரப்ரஹ்மணே நம :**

கண்டகண்கள் கண்ணனையல்லால் மற்றொன்றினைக் காணாது - மண்
உண்ட வாயினுள்ளே அண்டமெல்லாம் அடங்கக் கண்டீர் - எம்
அண்டக்குலத்துக் கதிபதியை அசுரரை அழித்தவனை - நம்
தொண்டக் குலத்துளுள்ளோர் வந்து காவளம்பாடியில் வணங்குவரே !!

**தாமரை நாயகி சமேத தாமரையாள் கேள்வன் திருவடிகளே சரணம்**

வணங்கு நன்னெஞ்சே நெடிதுயர்ந்த நெடுமாலை
குணக் குன்றை குன்றேந்திய கருமுகிலை
அர்த்தமுள்ள அருமறையாம் கீதையெனும் தத்துவத்தை
பார்த்தனுக்கு உரைத்தவனை பார்த்தன் பள்ளியடைந்தே !!

**அல்லிமாமலர் நாச்சியார் சமேத செம்பொன் அரங்கன் திருவடிகளே சரணம்**

பள்ளியிலோதும் இச்சிறுவன்வாயில் ஆயிரம்நாமம் சொல்லவைத்திப்
பிள்ளையின் பசியைத்தீர்த்து பிணிபிறப் பிறப்பறுத்து
எல்லையில் இன்பம் நல்கும் செம்பொன் அரங்கனார்க்கு
இல்லை ஈடிணை இயம்பினேன் உண்மையை !!

**புருஷோத்தமநாயிகா சமேத ஸ்ரீ புருஷோத்தம பரப்ரஹ்மணே நம :**

உண்மையை உணரவேண்டின் உண்மையோடிருத்தல் வேண்டும்
நன்மையே பெரிதும்வேண்டின் நாரணன்தாள் பணிதல் வேண்டும்
மன்பதை போற்றுமிந்த மாதவனை அறிதல் வேண்டின்
வண்புருடோத்தமம் சென்றடைதல் வேண்டும் !!

**கடல்மகள் நாச்சியார் சமேத தெய்வநாயகப் பரப்ரஹ்மணே நம :**

வேண்டியவர்க்கு வேண்டியதை வேண்டாமலே அளிப்பவன்தன்னை
வேண்டாதாற்கும் வேண்டியதை வேண்டாமலே அளிப்பவன்தன்னை
வேண்டியது வேண்டாமை இரண்டும் இலாதவன் தன்னை
வேண்டினேன் பிறப்பொழிக்க தேவனார்தொகை யுட்புகுந்தே !!